பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**18 04 2026** **7 15**

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மகளிருக்கு அதிகாரம் அளிக்க வகை செய்யும் அரசியலமைப்பு சட்டத் திருத்த மசோதா மக்களவையில் போதிய ஆதரவு கிடைக்காததால் தோல்வியடைந்தது.

**2.** மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கான அரிய வாய்ப்பை எதிர்க்கட்சிகள் வீணடித்துவிட்டதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ குற்றம் சாட்டியுள்ளார்.

**3.** நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை சட்ட திருத்த மசோதா தோல்வியடைந்திருப்பது எதிர்க்கட்சிகளுக்கு கிடைத்த வெற்றி என்று திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**4.** ஈரானுடன் முழுமையான அமைதி ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் வரை, அந்த நாட்டின் துறைமுகங்கள் மீதான கட்டுப்பாடுகள் தொடரும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

**5.** ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை அணி **1-0** என்ற கோல் கணக்கில் தில்லி அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் மகளிருக்கு மூன்றில் ஒரு பங்கு இடஒதுக்கீடு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட அரசியலமைப்பு சட்டத் திருத்த மசோதா மக்களவையில் போதிய ஆதரவு கிடைக்காததால் தோல்வியடைந்தது.

இந்த மசோதா நிறைவேற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவை என்ற நிலையில், மொத்தம் பங்கேற்ற **528** உறுப்பினர்களில் **352** உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில் மசோதாவிற்கு ஆதரவாக **298** உறுப்பினர்களும், எதிராக **230** உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

மசோதா நிறைவேற தேவையான பெரும்பான்மை கிடைக்காததால், இந்தச் சட்டத்தை மேற்கொண்டு செயல்படுத்த இயலாது என்று மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா கூறினார்.

இதனைத் தொடர்ந்து பேசிய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, இந்த மசோதா தோல்வியடைந்ததால், இதனுடன் தொடர்புடைய தொகுதி மறுவரையறை மசோதா மற்றும் யூனியன்பிரதேச சட்டத்திருத்த மசோதா ஆகியவையும் நிறைவேற்றப்படாது என்று தெரிவித்தார்.

பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கான அரிய வாய்ப்பை எதிர்க்கட்சிகள் வீணடித்துவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

முன்னதாக, இந்த மசோதாக்கள் மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, 2029-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலை மகளிர் இடஒதுக்கீட்டுடன் நடத்துவதே அரசின் நோக்கம் என்றும், இதற்காக அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்றும் உறுதியளித்தார்.

<<<<>>>>

நாட்டின் சரிபாதி மக்கள் தொகையான மகளிருக்கு எதிர்க்கட்சிகள் துரோகம் இழைத்துவிட்டதாக பிஜேபி தேசியத் தலைவர் திரு. நிதின் நவீன் குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா மக்களவையில் நிறைவேறாமல் போனது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மகளிர் ஆற்றலை போற்றும் வகையில் அரசு இந்த சட்ட திருத்த மசோதாவை தாக்கல் செய்யதாக அவர் கூறினார்.

ஆனால் இந்த சட்டத்தை செயல்படுத்துவதற்குத் தடையாக இருந்ததன் மூலம் காங்கிரஸ், திமுக, திரிணாமுல் காங்கிரஸ்,

சமாஜ்வாடி கட்சி உள்ளிட்ட ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளின் மகளிர் விரோத போக்கு மீண்டும் ஒருமுறை வெளிப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை சட்ட திருத்த மசோதா தோல்வியடைந்திருப்பது எதிர்க்கட்சிகளுக்கு கிடைத்த வெற்றி என்று திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

மத்திய அரசு எந்தவித கலந்தாலோசனையையும், கருத்தொற்றுமையையும் ஏற்படுத்தாமல் இந்த மசோதாவை மாநிலங்கள் மீது திணிக்க முயன்றதாக சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மசோதா தொடர்பாக தென் மாநிலங்களின் கவலையை நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்த அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் தாம் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகள் அனைவரும் தொடர்ந்து ஓரணியில் செயல்பட வேண்டும் என்றும் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

நாடாளுமன்றத்தில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்படுவதை காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகள் தடுத்து நிறுத்தியுள்ளதற்கு ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், மகளிர் மேம்பாட்டிற்கான ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கையை எதிர்க்கட்சிகள் தடுத்துவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணி, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவே இத்தகைய முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தியுள்ளதாக திரு. நாயுடு குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<>>>>

**இனி தேர்தல் களம்...**

**(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)**

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகள்.

**(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 180 செகண்ட்ஸ்)**

<<<<>>>>

ஈரானுடன் முழுமையான அமைதி ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் வரை, அந்த நாட்டின் துறைமுகங்கள் மீதான அமெரிக்க கடற்படையின் முற்றுகை தொடரும் என்று அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஈரான் மேற்கொண்டபோதிலும், அமெரிக்கா தனது நிலையில் பின்வாங்கவில்லை என்று தனது சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

ஈரான் உடனான பேச்சுவார்த்தை தொடரும் என்றும், அமெரிக்காவின் பொருளாதார தடைகள் மிக விரைவாக முடிவடையும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஈரானிடம் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அமெரிக்காவிற்கு மாற்ற ஒப்புக்கொண்டதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் டிரம்ப் கூறியுள்ள கருத்தை ஈரான் மறுத்துள்ளது.

இது தொடர்பாக விளக்கம் அளித்துள்ள ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் திரு. இஸ்மாயில் பாகேய்,

எத்தகைய சூழ்நிலையிலும் இத்தகைய நடவடிக்கைக்குத் தங்கள் நாடு அனுமதிக்காது என்று கூறியுள்ளார்.

மேலும் ஹோர்முஸ் நீரிணை குறித்து அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கும் கருத்துக்கள் முரணானவை என்றும், இது அவர்களின் விரக்தியை காட்டுவதாகவும் அவர் விமர்சித்துள்ளார்.

<<<<>>>>

தலைநகர் தில்லியின் பல்வேறு பகுதிகளில் நேற்று பலத்த மழை பெய்தது.

இதனால் கடந்த சில நாட்களாக கடும் கோடை வெப்பத்தில் அவதிப்பட்ட மக்கள் சற்று நிம்மதி அடைந்தனர்.

**(C/o)**

இந்நிலையில் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தில்லி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இடியுடன் கூடிய மிதமான மழை பெய்துள்ள போதிலும் வரும் நாட்களில் வெப்பம் மீண்டும் அதிகரிக்கும் என்று கூறியுள்ளது.

<<<<>>>>

சென்னையில் நேற்று நடைபெற்ற ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை அணி 1-0 என்ற கோல் கணக்கில் தில்லி அணியை வென்றது.

புவனேஸ்வரில் முகமதன் அணி - ஒடிசா அணிகளுக்கு இடையே நடைபெற்ற மற்றொரு ஆட்டம் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது.

------------

இந்தியாவுக்கு எதிரான முதலாவது மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்கா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டர்பனில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய இந்தியா, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 157 ரன் எடுத்தது.

158 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிங்கிய தென்னாப்பிரிக்க அணி, 5 பந்துகள் மீதமிருக்கையில் இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி **5** விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **180** ரன் எடுத்தது.

**181** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய குஜராத் அணி **19** புள்ளி **4** ஓவரில் **5** விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

பெங்களூருவில் இன்று மாலை மணி **3.30**க்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் தில்லி அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

ஹைதராபாதில் இரவு மணி **7.30**க்கு நடைபெற உள்ள ஆட்டத்தில் சென்னை அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**